# ஜமால் முகமது கல்லூரி(தன்னாட்சி)

தேசியத்தர மதிப்பீட்டு நான்காம் சுற்றில் ‘A++’ அங்கீகாரம் பெற்றது (CGPA 4க்கு 3.69)

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

திருச்சிராப்பள்ளி – 620 020

## தமிழாய்வுத்துறை (தன்நிதிப்பிரிவு–பெண்கள்)

# திறன் வளர் பயிற்சிப் பட்டறை

(ஐந்து நாட்கள் : 19.02.2024 – 23.02.2024)

நாட்கள் : 19.02.2024 – 23.02.2024 நேரம் : பிற்பகல் 2.00 – 6.30மணி

நிகழ்விடம் : அல்மென் - கருத்தரங்க அறை

வரவேற்புரை : முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன், தேர்வு நெறியாளர்& தமிழாய்வுத்துறைத் தலைவர்

தலைமையுரை : முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன், முதல்வர்

வாழ்த்துரை : முனைவர் அ.கா. காஜா நஜீமுதீன், டி.லிட் (USA), செயலர் & தாளாளர்

ஹாஜி எம்.ஜே. ஜமால் முஹம்மது, பொருளாளர்

முனைவர் க. அப்துஸ் சமது, துணைச் செயலர்

முனைவர் கா.ந. அப்துல் காதர் நிஹால்,

நிர்வாகக்குழு உறுப்பினர் மற்றும் மதிப்புறு இயக்குநர்

முனைவர் D.I. ஜார்ஜ் அமலரெத்தினம், துணை முதல்வர்

முனைவர் கா.ந. முகம்மது பாசில், இயக்குநர் - விடுதி நிர்வாகம்

செல்வி J. ஹாஜிரா பாத்திமா, இயக்குநர் - பெண்கள் விடுதி

ஒருங்கிணைப்பாளர்கள் :

முனைவர் மு.ஹ. ஜஹானாரா,
தமிழாய்வுத்துறைப் பொறுப்பாளர் (பெண்கள்),
வருகைப் பதிவாளர் & பகுதி ஐந்து ஒருங்கிணைப்பாளர்.

முனைவர் ச. பார்வதி,
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை.

| தேதி | முதல் அமர்வு<br>நேரம் : பிற்பகல் 2.30 – 4.00 மணி | இரண்டாம் அமர்வு<br>நேரம் : பிற்பகல்4.15 – 6.15 மணி |
|---|---|---|
| 19.02.2024 | **முனைவர் ப. தனலெட்சுமி**<br>உதவிப்பேராசிரியர், விலங்கியல் துறை, ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.<br>**தலைப்பு : நாட்டியக்கலை** | **முனைவர் அ. ஜான்சிராணி**<br>உதவிப்பேராசிரியர்,தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.<br>**தலைப்பு : எழுத்துக்கலை** |
| 20.02.2024 | **முனைவர் கா. வாசுதேவன்,**<br>தமிழாய்வுத்துறைத் தலைவர் &இணைப்பேராசிரியர்,தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி.<br>**தலைப்பு : படைப்பிலக்கியப் பின்புலம்** | **Dr. K. ஆல்பர்ட் ரொமாண்டோ**<br>MBA., MSW., BAMS., MD.Acu..<br>Founder – Healix Ayuvedha Practicer<br>**தலைப்பு : மருத்துவக்கலை** |
| 21.02.2024 | **முனைவர் வ. நாராயணநம்பி**<br>இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி.<br>**தலைப்பு : சிறுகதை – உத்திகள்** | **திரு. நி. அமிருதீன்**<br>உதவிப்பேராசிரியர்,தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.<br>**தலைப்பு : நாடகக்கலை** |
| 22.02.2024 | **முனைவர் மு. அருணாசலம்**<br>இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி.<br>**தலைப்பு : கவிதை - உத்திகள்** | **திரு. மு. முகமது ஆதில் ஹாஷிம்,**<br>ERP பிரிவு, ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.<br>**தலைப்பு : கணினிக்கலை** |
| 23.02.2024 | **திருமதி. ஆசி.ஃபா ஜபீன்**<br>உதவிப்பேராசிரியர், ஊட்டச்சத்து மற்றும் உணவுத்துறை,<br>ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.<br>**தலைப்பு : சமையற்கலை** | **திரு. து. பிரபாகரன்**<br>உதவிப்பேராசிரியர்,<br>தமிழாய்வுத் துறை,<br>ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.<br>**தலைப்பு : பேச்சுக்கலை** |

## பயிற்சிப் பட்டறை - உறுப்பினர்கள்

முனைவர் சு. விஜயலெட்சுமி
முனைவர் பீ. ரஷீதா பேகம்
முனைவர் மு. அலிபிநிஷா
முனைவர் கரு. கலையரசி
முனைவர் அ. ஜனார்த்தலி பேகம்
முனைவர் சு. இளவரசி

திருமதி. அ. பரிதா பானு
திருமதி ச. செல்வி
திருமதி. ரா. ரஜீலா
முனைவர் அ. ஜான்சிராணி
திருமதி மு. ஷர்மிளா பானு

**அனைவரும் வருக! கலைகளைப் பெறுக!**

# ஜமால் முகமது கல்லூரி(தன்னாட்சி)

**தேசியத்தர மதிப்பீட்டு நான்காம் சுற்றில் ‘A++’ அங்கீகாரம் பெற்றது (CGPA 4க்கு 3.69)**

**(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)**

**திருச்சிராப்பள்ளி – 620 020**

ஜமால் முகமது கல்லூரி (தன்னிதிப்பிரிவு-பெண்கள்) தமிழாய்வுத்துறைச் சார்பாக மாணவிகளுக்கு **ஐந்து நாட்கள் (19.02.2024 - 23.02.2024) திறன் வளர் பயிற்சிப் பட்டறை** நடைபெற்றது. **19.02.24** அன்று தொடக்கவிழாவிற்கு **முனைவர் அ. ஜனார்த்தலி பேகம்** பயிற்சிப் பட்டறைக்கு வந்த அனைவரையும் வரவேற்றார். **கூடுதல் துணை முதல்வர் கலைப்புல முதன்மையர்** வாழ்த்துரை வழங்கினார். தமிழாய்வுத்துறையின் மூத்தப்பேராசிரியர் **முனைவர் முகமது யூனிசு** அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். முதல் அமர்வில் **முனைவர் ப. தனலெட்சுமி** அவர்கள் **நடனக்கலை** என்ற தலைப்பில் நடனக்கலையின் முக்கியத்துவத்தையும் அதன் முத்திரைகளையும் மாணவிகளுக்கு ஆடிக் காட்டிச் சிறப்பாக எடுத்துரைத்தார். இரண்டாம் அமர்வில் **முனைவர் அ. ஜான்சி ராணி** அவர்கள் **எழுத்துக்கலை** என்ற தலைப்பில் எழுத்துக்களைப் பற்றியும், சீர்களைப் பற்றியும், பா எழுதுவதற்கான பயிற்சியையும் மாணவிக்குக் கொடுத்தார்.

**20.02.24** அன்று முதல் அமர்வில் **முனைவர் கா. வாசுதேவன்** அவர்கள் **படைப்பிலக்கியப் பின்புலம்** என்ற தலைப்பில் புதினம், சிறுகதை ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள பின்புலத்தை நூல்களை சுட்டி விரிவாக எடுத்துரைத்தார். மாணவிகளுக்கு வாசிப்பு பழக்க வேண்டும் என்று கூறினார். இரண்டாம் அமர்வில் **Dr. K. ஆல்பர்ட் ரொமாண்டோ** அவர்கள் **மருத்துவக்கலை** என்ற தலைப்பில் உடலில் உள்ள ஐம்பூதங்களை விளக்கி, நோய்களையும் அதற்குரிய தீர்வுகளையும் சிறப்பாக விளக்கிறார்.

**21.02.24** அன்று முதல் அமர்வில் **முனைவர் வ. நாராயணநம்பி** அவர்கள் **சிறுகதை – உத்திகள்** என்ற தலைப்பில் சிறுகதைகளை எப்படி எழுத வேண்டும் என்றும் அதில் இடம்பெறும் உத்திகளை பற்றியும் எடுத்துரைத்தார். இரண்டாம் அமர்வில் **திரு. நி. அமிருதீன்** அவர்கள் **நாடகக்கலை** என்ற தலைப்பில் நாடகக்கலையின் தோற்றத்தையும் அதன் வளர்ச்சி நிலையும் சிறு சிறு நாடகங்களை நடித்துக் காட்டி மாணவிகளையும் நடிக்கச் சொல்லி உற்சாகமூட்டினார். 100 ரூபாய் வீதம் ஐந்து மாணவிளுக்கு பரிசும் கொடுத்தார்.

**22.02.24** அன்று முதல் அமர்வில் **முனைவர் மு. அருணாசலம்** அவர்கள் **கவிதை - உத்திகள்** என்ற தலைப்பில் பல எழுத்தாளர்களில் கவிதைகளை வாசித்துக் காட்டி அதில் இடம்பெற்றுள்ள உத்திகளை எடுத்துரைத்தார். இறுதியாக மாணவிகளுக்கு முள் என்ற தலைப்புக் கொடுத்து கவிதை எழுத வைத்தார். அதில் முதல் பரிசு ரூ.500, 2வது பரிசு ரூ.300 (2 -

மாணவிகளுக்கும்) 3வது பரிசு ரூ200 என கொடுத்து மாணவிகளின் திறனை வளர்த்தார். இரண்டாம் அமர்வில் **திரு. மு. முகமது ஆதில் ஹாஷிம்** அவர்கள் கணினிக்கலை என்ற தலைப்பில் படிப்பதை எப்படி மற்றவர்களுக்கு ரசிக்கும்படி எடுத்துரைக்க வேண்டும் என்பதை பவர்பாய்ண்ட் மூலம் ஒலி, ஒளி படங்களை எப்படி கொண்டு வருவது போன்ற செய்திகளை தெளிவாக கற்றுக் கொடுத்தார்.

**23.02.24** அன்று **திருமதி ஆசி.ஃபா ஜெபின்** அவர்கள் **சமையற்கலை** என்ற தலைப்பில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் அஞ்சறைப்பெட்டியில் உள்ள பொருட்களை எப்படி நம்மை நோய்களில் இருந்த காப்பாற்றுகிறது. மேலும் அதனை எப்படி எல்லாம் பயன்படுத்தலாம் என்பதையும் மாணவிகளுக்குத் தெளிவாக விளக்கிறார். திரு. து. பிரகாகரன் அவர்கள் பேச்சுக்கலை என்ற தலைப்பில் பேச்சின் முக்கியத்துவத்தையும் எப்படி எல்லாம் பேச வேண்டும் என்பதை தன்னுடைய பேச்சுக்கலையாலே மாணவிகளுக்கு அழுத்தம் எடுத்துரைத்தார்.

**23.02.24** அன்று பிற்பகல் 4.30 மணிக்கு நிறைவு விழா இனிதாக தொடங்கியது. தேர்வுநெறியாளர் மற்றும் தமிழாய்வுத்துறைத் தலைவர் **முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன்** அவர்கள் அனைவரையும் வரவேற்றோர். கல்லூரியின் முதல்வர் **முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன்** அவர்கள் தலைமையுரையாற்றினார். கல்லூரயின் செயலர் மற்றும் தாளாளர் **முனைவர் அ.கா. காஜா நஜீமுதீன், டி.லிட் (USA),** அவர்கள் வாழ்த்துரையாற்றியார். இப்பயிற்சிப் பட்டறை நடத்திய ஒருங்கிணைப்பாளர்கள், வளநபர்கள், பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. கவிதை எழுதி வெற்றிப்பெற்ற மாணவிகளுக்கு பரிசு கொடுத்தப்பட்டது. நிறைவாக பயிற்சிப் பட்டறையின் ஒருங்கிணைப்பாளர், வருகைப்பதிவாளர், பகுதி ஐந்து ஒருங்கிணைப்பாளர், துறைப்பொறுப்பாளர் **முனைவர் மு.ஹ. ஜஹானாரா** அவர்கள் நன்றியுரையாற்றினார். ஒவ்வொரு நாளுக்கு அமர்வுக்கும் தமிழாய்வுத்துறை பெண்கள் துறைப்பேராசிரியர் வரவேற்பும், மாணவிகள் நன்றியுரை வழங்கினார்கள். இப்பயிற்சிப்பட்டறையில் 100 மாணவிகள் கலந்துக் கொண்டு பயன் அடைந்தார்கள் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.


GPS Map Camera
Edamalaipatti Pudur, Tamil Nadu, India
QMPW+378, Kajamalai Colony, Edamalaipatti Pudur, Tiruchirappalli, Tamil Nadu 620020, India
Lat 10.785123°
Long 78.695668°
19/02/24 03:05 PM GMT +05:30
Google


JMC
GPS Map Camera
Edamalaipatti Pudur, Tamil Nadu, India
QMPW+378, Kajamalai Colony, Edamalaipatti Pudur, Tiruchirappalli, Tamil Nadu 620020, India
Lat 10.785123°
Long 78.695668°
20/02/24 02:36 PM GMT +05:30
Google


GPS Map Camera
Edamalaipatti Pudur, Tamil Nadu, India
QMPW+378, Kajamalai Colony, Edamalaipatti Pudur, Tiruchirappalli, Tamil Nadu 620020, India
Lat 10.785123°
Long 78.695668°
21/02/24 04:36 PM GMT +05:30
Google









பயிற்சிப் பட்டறையின் ஒருங்கிணைப்பாளருக்குச் சிறப்புச் செய்த போது எடுத்தப் படம்







வளநபருக்குச் சிறப்பு செய்த போதும் மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கிய போதும் எடுத்தப் படம்